25.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து விவசாயிகள் பயன்பெற வேண்டும்: மாவட்ட ஆட்சியர்

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை விவசாயிகள் பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி கேட்டுக் கொண்டார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டத்துக்கு தலைமை தாங்கி ஆட்சியர் எ.சுந்தரவல்லி பேசியதாவது: மாவட்டத்தில் தற்போது மழை அளவு கூடுதலாக பெறப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் தரமான விதைகளை வாங்கி பயிர் செய்து விவசாயத்தில் மிகச் சிறந்த மாவட்டமாக திருவள்ளூரை மாற்ற வேண்டும்.

கடந்த 2011-ஆம் ஆண்டு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் இதில் உறுப்பினராகி இத்திட்டத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து பயன்களையும் பெற வேண்டும்.

இத்திட்டத்தில் இரண்டரை ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை நிலமுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, முதியோர் உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து ஆகியவற்றில் இறந்து போன விவசாயிகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படும். இளங்கலை, முதுகலை படிக்கின்ற விவசாயிகளின் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

மாவட்டத்தில் தேவையான இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கரும்பு விவசாயிகளுக்கு கரும்புக்கான முழுத் தொகை விரைவில் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆரணியாறு, குசஸ்தலையாறு வடிநில கோட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் 100 சதவீதம் முன்னுரிமை அடிப்படையில் நடைபெற்று வருகிறது என்றார்.

சாலையில் திரியும் மாடுகளை கட்டுப்படுத்த கால்நடைப் பட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏரிப் பாசனக் கால்வாய்களை சீரமைத்துத் தர வேண்டும். மழைநீர் வடிய வடிகால்கள் அமைக்கப்படவும், கரும்புக்கு உரிய விலை கொடுக்க வேண்டும்.

மாவட்டத்தில் பொதுப்பணித் துறை ஏரி நீர்வரத்துக் கால்வாய்களில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகளை அகற்றவும் வழிவகைகள் செய்யப்பட வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் மானியத் திட்டங்கள் குறித்த கையேடும், பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பிரசுரங்களும் வழங்கப்பட வேண்டும். மேலும், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு எடுத்துச் செல்ல சாலை வசதி செய்து தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியர் உறுதியளித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் பயன்கள் குறித்த கையேடு வழங்கப்பட்டது.

தொடர்ந்து கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. விவசாயிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, இணை இயக்குநர் முருகவேல், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பாபு, கோட்டாட்சியர்கள்

நாராயணன், விமல்ராஜ், ஜெயச்சந்திரன், வீரப்பன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## கொப்பரை கொள்முதல்: தென்னை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தென்னை விவசாயிகள் கொப்பரை கொள்முதலை பயன்படுத்தி பயன்பெறுமாறு ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கோயம்புத்தூர், பொள்ளாச்சி மற்றும் சூலூர் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலம் தெலுங்குபாளையம், பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, நெகமம், திம்மங்குத்து, திப்பம்பட்டி மற்றும் செஞ்சேரி ஆகிய 8 இடங்களில் அமைந்துள்ள நேரடிக் கொப்பரை மையங்கள் மூலம் தென்னை விவசாயிகளிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் 6 மாத காலத்துக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்படும். எனவே, சம்பந்தப்பட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கங்கத்தில் பதிவு செய்துள்ள விவசாய உறுப்பினர்களிடம் இருந்து பதிவு மூப்பு அடிப்படையில் வேளாண் அலுவலர்கள் சான்று செய்த தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 59.50 வீதம் கொள்முதல் செய்யப்படும். இதில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட விவசாய உறுப்பினர்களின் வங்கிக் கணக்கில் மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் நேரடியாகவே அல்லது கோடிட்ட காசோலையாகவோ வழங்கப்படும். எனவே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தென்னை விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

## தேங்காய் பருப்பு ரூ.24 லட்சத்துக்கு ஏலம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், தேங்காய் பருப்பு ரூ. 24 லட்சத்துக்கு ஏலம் போனது.

இந்த ஏலத்துக்கு 866 மூட்டைகளில் 39,366 கிலோ எடையுள்ள தேங்காய் பருப்பு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில், முதல் தரம் அதிகபட்ச விலையாக கிலோ ரூ.54.20-க்கும், குறைந்த பட்சவிலையாக கிலோ ரூ.52.15-க்கும், இரண்டாம் தரம் அதிகபட்ச விலையாக ரூ.52.60-க்கும், குறைந்தபட்ச விலை ரூ.45.10-க்கும் என மொத்தம் ரூ.19 லட்சத்து 98 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதேபோல், 33 டன் எடையுள்ள 82 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்ச விலையாக டன் ரூ. 13,899-க்கும், குறைந்த விலையாக டன் ரூ. 11,800-க்கும், சராசரி விலை ரூ.12,300 என மொத்தம் ரூ.4 லட்சத்து 9ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

## ஏக்கருக்கு 118 டன்: கரும்பு சாகுபடியில் நாமக்கல் மாவட்ட விவசாயி சாதனை

ஏக்கருக்கு 118 டன் கரும்பு மகசூல் எடுத்து நாமக்கல் மாவட்ட விவசாயி மாநில அளவில் இரண்டாமிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் அருகே கொக்கராயன்பேட்டையைச் சேர்ந்த விவசாயி கந்தசாமி (60). அவருக்கு 2.5 ஏக்கர் விவசாய விளை நிலம் உள்ளது. ஒரு ஏக்கரில் கரும்பு பயிரிட்டுள்ள அவர், அண்மையில் வெட்டி பள்ளிபாளையம் பொன்னி சர்க்கரை ஆலைக்கு அனுப்பி உள்ளார். அதில் ஒரு ஏக்கரில் 118 டன் மகசூல் வந்துள்ளது. இதன் மூலம் அவர் கரும்பு சாகுபடியில் மாநில அளவில் இரண்டாமிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், விவசாயி கந்தசாமிக்கு

ரூ.15,000 பரிசுக்கான காசோலையை வழங்கி மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி பாராட்டினார்.

இதுகுறித்து விவசாயி கந்தசாமி கூறியது: கரும்பு வெட்டிய 30 நாட்களில், யூரியா இட்டும், பூச்சி மருந்து அடித்தும், களை எடுத்தும் பராமரிக்கிறேன். அதைபோல், குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை, யூரியா, காம்ப்ளக்ஸ் உரம் ஆகியவற்றை முறையாக இட்டு வருகின்றேன்.

தினமும் அதிகாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை விவசாயப் பணியை மேற்கொண்டு வருகிறேன். என் சொந்த உழைப்பு மட்டுமே, கூலி ஆட்களை வைத்துக் கொள்வதில்லை.

ஆண்டுதோறும் மகசூலை அதிகரிக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறேன். அதன்படி, கடந்த ஆண்டுகளில் ஏக்கருக்கு 105, 107, 110, 115 டன் மகசூல் பெற்றுள்ளேன். தற்போது ஏக்கருக்கு, 118 டன் மகசூல் எடுத்து மாநில அளவில் இரண்டாமிடம் பெற்றுள்ளேன். இது மகிழ்ச்சியை அளிக்கிறது, அடுத்த ஆண்டு முதலிடம் பெற முயற்சி மேற்கொள்வேன் என்றார்.

90 சத கரும்பு விவசாயிகள் ஏக்கருக்கு 40 டன் மகசூல் எடுக்கவே சிரமப்படுகின்றனர். ஆனால், கந்தசாமி ஏக்கருக்கு 118 டன் மசூல் எடுத்து நாமக்கல் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளதோடு, பிற விவசாயிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார் என கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பாராட்டினர்.

## பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 18 லட்சத்துக்கு பருத்தி கொள்முதல்

பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பருத்தி பஞ்சு மறைமுக ஏலத்தில் ரூ. 18 லட்சத்து 20 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது.

பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கோபுராஜபுரம், அன்னுகுடி, புலி மங்கலம், குப்பைமேடு, பெருமாங்குடி, பண்டாரவாடை,

நெடுந்தெரு, உத்தாணி, மாலாபுரம், கோட்டைச்சேரி, தேவராயன்பேட்டை, பாபநாசம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 268 விவசாயிகள், தங்கள் நிலங்களில் விளைந்த 350 குவிண்டால் பருத்தி பஞ்சுகளை விற்பனை செய்ய கொண்டு வந்தனர்.

அங்கு, தஞ்சாவூர் விற்பனை குழு செயலர் மு. ரவி, விற்பனை கூட கண்காணிப்பாளர் மு. பிரயா மாலினி, மேற்பார்வையாளர் பி. சங்கர்ராஜா உள்ளிட்டோர் முன்னிலையில் மறைமுக ஏல விற்பனை நடைபெற்றது.

விற்பனையில் ஒரு குவிண்டால் பருத்தி அதிகபட்சமாக ரூ. 5 ஆயிரத்து 419 க்கும், நடுத்தரமாக ரூ. 5 ஆயிரத்து 200-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 4 ஆயிரத்து 800 க்கும், மிக குறைந்தபட்சமாக (மழையில் பாதிக்கப்பட்ட பஞ்சு) ரூ. 3ஆயிரத்து 809-க்கும் விலை போனது. பருத்தி பஞ்சு அதிக விலைக்கு போனதால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

## மாவட்டத்தில் 13,565 ஹெக்டேரில் குறுவை சாகுபடி

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ. சந்திரசேகரன் பேசியது:

மாவட்டத்தில் நிகழாண்டு குறுவை பருவத்தில் 43,000 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இதுவரை 13,565 ஹெக்டேரில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பருவத்தில் ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், குறுவை பருவத்துக்கான நாற்றங்கால் 1,885 ஹெக்டேரில் உள்ளது.

நிகழ் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள 13,565 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 9,496 ஹெக்டேரில் நடவு செய்யப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 ஆகிய நெல் ரகங்கள் இதுவரை 262 டன்கள் விநியோகம்

செய்யப்பட்டுள்ளன. தற்போது, 65 டன் விதைகள் இருப்பில் உள்ளன. தவிர, தனியார், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 130 டன்கள் அளவு விதைகள் இருப்பு வைக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பயறு வகைப் பயிர்கள் 11,650 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்து பயிர்கள் 950 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களிலும், தனியார் விற்பனை நிலையங்களிலும் யூரியா 8,340 டன்களும், டி.ஏ.பி. உரம் 3,710 டன்களும், பொட்டாஷ் 2,620 டன்களும், கூட்டு உரங்கள் 2,250 டன்களும் இருப்பு வைக்கப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றன என்றார் சந்திரசேகரன்.

## நாகையில் 5.3 மி.மீ. மழை

நாகை மாவட்டத்தில் அதிகளவாக நாகையில் 5.3 மி.மீ மழை பதிவானது.

மேலடுக்கு சுழற்சி காரணமாக, கடந்த ஜூன் 22, 23 ஆகிய தேதிகளில் நாகை மாவட்டத்தில் லேசான மற்றும் மிதமான மழை பெய்தது. மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக இந்த மழை பெய்தது.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக நாகையில் 5.3 மி.மீ மழை பதிவானது. மற்ற பகுதிகளின் மழையளவு (மில்லி மீட்டரில்) : வேதாரண்யம் - 5.2. தரங்கம்பாடி - 3. மணல்மேடு - 2.2. மயிலாடுதுறை, சீர்காழி - 2.

மழையின் காரணமாக, வியாழக்கிழமை இரவு குளிர் வானிலை நீடித்தது. வெள்ளிக்கிழமை பகலில் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியில் மழையில்லை. இரவு 11 மணியளவில் நாகை மற்றும் சுற்றுப் பகுதியில் லேசான மழை பெய்தது.

## திருப்பூருக்கு 1,200 டன் பொது ரக அரிசி அனுப்பி வைப்பு

நீடாமங்கலத்திலிருந்து திருப்பூருக்கு பொது விநியோகத் திட்டத்திற்காக 1,200 டன் பொது ரக அரிசி வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 96 லாரிகளில் ஆயிரத்து 200 டன் சன்னரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது. நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் முன்னிலையில் திருப்பூருக்கு சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

## பயறுவகை பயிர்களில் விதை உற்பத்தி செய்தால் வருமானம் இரட்டிப்பாகும்

விவசாயிகள் பயறு வகைப் பயிர்களில் விதைகள் உற்பத்தி செய்தால் இரட்டிப்பு வருமானம் பெறலாம் என்றார் வம்பன் வேளாண் நிலையத் தலைவர் இரா.பா.ஞானமலர்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் நிலையத்தில் புதன்கிழமை நடைபெற்ற பயிறு வகைப் பயிர்களில் விதை உற்பத்தி குறித்து நடைபெற்ற பயிற்சியில் மேலும் அவர் பேசியது:

பயறுவகைப் பயிர்களில் மகசூல் குறைவதற்கு விவசாயிகள் சரியான, ரகம், சரியான விதைகளை தேர்வு செய்யாமல் இருப்பதே முக்கிய காரணம்.

பயறு வகைப் பயிர்களில் உளுந்து, தட்டைப்பயிர், துவரை, பாசிப்பயறு ஆகியவற்றை பயிரிடுவதோடு, அதில் விதை உற்பத்தி செய்வதன் மூலம் வருமானம் இருமடங்காகும். மேலும், விவசாயிகள் விதைகள் உற்பத்தி செய்வதால் மற்ற விவசாயிகளுக்கு எளிமையாக பயறுவகைகளிள் விதைகள் கிடைக்கும். வம்பன் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து மஞ்சள் தேமல் நோய்க்கு முழு எதிர்ப்பு சக்தியுடன் வெளியிடப்பட்டுள்ள வம்பன் 8 ரக உளுந்தை விவசாயிகள் பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம் என்றார்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் மணிமேகலை, விதை அறிவியல், தொழில்நுட்ப பேராசிரியர் கதிரவன் உள்ளிட்டோர் பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பயறு வகை பயிர்கள் சாகுபடி குறித்து விளக்கமளித்தனர்.

## குமரி அரசுப் பழப் பண்ணையில் மாம்பழம் ஏலம் ஒத்திவைப்பு

கன்னியாகுமரி அரசுப் பழப் பண்ணையில் மாம்பழம் ஏலம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அரசு நிர்ணயித்ததை விட குறைவான தொகைக்கு வியாபாரிகள் ஏலம் கேட்டதால் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் செல்லும் பிரதான சாலையில் 37 ஏக்கர் நிலப்பரப்பில் அரசு பழப் பண்ணை அமைந்துள்ளது. இங்கு மா, சப்போட்டா, கொய்யா உள்ளிட்ட மரங்கள் மற்றும் ஏராளமான அலங்காரச் செடிகள் உள்ளன. இங்கு விளைச்சலாகும் மாம்பழங்கள் ஆண்டுக்கு இருமுறை ஏலம் விடப்படும். இதனை சுற்று வட்டார வியாபாரிகள் ஏலம் எடுத்துச் செல்வர்.

இந்நிலையில் நிகழாண்டுக்கான ஏலம், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அசோக் மேக்ரின் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. உதவி இயக்குநர் ஷீலா ஜான், அரசு தோட்டக்கலை அலுவலர் திலீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏலத்தில் பங்கேற்ற வியாபாரிகள், அரசு நிர்ணயம் செய்த தொகைக்கும் குறைவாக கேட்டதால் ஏலம் ஒத்திவைக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து ஏலத்தில் பங்கேற்ற வியாபாரி ஒருவர் கூறியது: அரசுப் பழப் பண்ணையில் விளைச்சலாகும் மாம்பழங்கள் மிகவும் தரமாக இருக்கும் என்பதால், ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் ஏலங்களில் பங்கேற்று வருகிறோம்.

ஆனால் மாம்பழங்கள் காய்க்கும் பருவத்திலேயே ஏலம் விடப்பட வேண்டும் என நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வருகிறோம். அவ்வாறு ஏலம் விடும்பட்சத்தில் காய்க்கும் போது ஏற்படும் நோய்த்

தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை நாங்களே பார்த்துக் கொள்வோம்.

மாங்காய் அறுவடை செய்யும் காலங்களில் ஏலம் விடப்படுவதால், ஏராளமான மாங்காய்கள் பூச்சித் தாக்குதலால் பாதிக்கப்பட்டு அழுகி விடுகின்றன. அதிகாரிகள் மாங்கனிகளை நோய்த் தாக்குதல்களில் இருந்து முறைப்படி பராமரிக்காததால் எங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எங்கள் கோரிக்கையை ஏற்று 2 மாதங்களுக்கு முன்னரே ஏலத்தை நடத்தியிருந்தால் அரசு நிர்ணயம் செய்ததைவிட அதிகமான தொகைக்கு ஏலம் கேட்டிருக்கலாம்.

இந்தப் பருவத்துக்கு ரூ. 1.44 லட்சம் என அரசு விலை நிர்ணயம் செய்திருந்தது. ரூ. 1 லட்சத்து 2 ஆயிரம் வரை ஏலம் கேட்டோம். ஆனால் அதிகாரிகள் ஏலத்தை ஒத்திவைப்பதாக தெரிவித்து விட்டனர் என்றனர்.

இதுகுறித்து மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அசோக் மேக்ரின் கூறியது: அரசு பழப் பண்ணையில் விளைச்சலாகும் மாம்பழங்களை பிற மாவட்ட தோட்டக்கலை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்தும், வெளிச் சந்தைகளின் விலைகளைப் பொருத்தும்தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. வியாபாரிகள் குறை சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பருவத்துக்கான ஏலம் விரைவில் நடைபெறும் என்றார் அவர்.

## "விவசாயிகள் நலன் காக்க தனியார் அமைப்புகள் உதவ வேண்டும்'

விவசாயிகள் நலன் காக்க அரசுடன் தனியார்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று, மெட்ரோ வர்த்தக நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் அரவிந்த் மெடிராத்தே தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்துள்ளது. அவர்கள் விளைவித்த பயிர்களுக்கு உரிய தொகை கிடைக்காமல் இருப்பதே இதற்கு காரணம். இதனால், அவர்கள் கடன் சுமையில் சிக்கித் தவிக்கின்றனர்.

விவசாயிகள், வியாபாரிகள் இடையே இடைத்தரகர்கள் நுழைவதால், விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இதனை கருத்தில் கொண்டு எங்கள் நிறுவனம் நேரிடையாக விவசாயிகளிடம் காய்கறிகளை கொள்முதல் செய்கிறது.

காலையில் கொள்முதல் செய்யும் காய்கனிகளுக்கான தொகையை மாலைக்குள் அவர்களின் வங்கிக் கணக்கில் சேர்த்து விடுகிறோம். விவசாயிகளின் வளர்ச்சிக்கு அரசு மட்டுமன்றி தனியாரும் ஒத்துழைக்க வேண்டும். பெரும் நிறுவனங்கள் சில்லறை வணிகர்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்பட வேண்டும் என்றார். பேட்டியின் போது அந்த நிறுவனத்தின் பொதுமேலாளர் ஜோத்ஸ்னா மூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

### கேழ்வரகு கூழுக்கு முக்கியத்துவம்

வெயில் காலத்தைப் போல் காற்று காலத்திலும் தோல் உலரும். இதனால் தாகம் இல்லாவிட்டாலும் அவ்வப்போது தண்ணீர் அருந்த வேண்டும். காற்று காலத்தில்கிருமிகள் பரவும். இதனால் காய்ச்சல், இருமல், சளி, தட்டம்மைபோன்றவை ஏற்படும்.இந்த பிரச்னைகளினால் உடலில் தாது உப்புகளின் அளவு குறையும். எனவே தான் கோயில்களில் காற்று காலத்தில்ஆடி மாதத்தில் கூழ் ஊற்றும் வழக்கம் ஏற்பட்டது. கேழ்வரகில் தாது உப்புகளின் அளவு அதிகம் உள்ளது. எனவே தான்கேழ்வரகு கூழுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

## தேயிலை மகசூல் அதிகரிப்பு

மஞ்சூர்: மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் மழை பெய் வதால், தேயிலை மகசூல் அதிகரித்து வருகிறது.

மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழி லாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பாண்டு துவக்கத்திலிருந்து போதிய மழை இல்லாத காரணத்தினால், வறட்சி ஏற்பட்டு, மகசூல் குறைந்து பாதிப்பு ஏற்பட்டது. இந்நிலையில், தற்போது மழை பெய்து வருவதால், மஞ்சூர், காந்திகண்டி உட்பட சில பகுதிகளில், பசுந்தேயிலை விளைச்சல் அதிகரித்து வருகிறது. இதனால், விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர். வரும் நாட்களில் மழை தொடரும் பட்சத்தில், பிற பகுதிகளிலும் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## ஆப்பிள் விலை அதிகம்

திண்டுக்கல், : திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல்பகுதியில் ஓரளவுக்கு ஆப்பிள் பயிரிடப்படுகிறது. ஆரஞ்சு 2 ஆயிரம் எக்டேரில் சாகுபடியாகிறது. திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு காஷ்மீரிலிருந்து தினமும் 5 டன் ஆப்பிள் வரும். உள்ளூர், மதுரை, சேலம், ஆந்திரா மாநிலங்களில் இருந்து 20 டன் ஆரஞ்சு பழமும் விற்பனைக்கு வரும். காஷ்மீரில் சீசன் முடிந்து விட்டதால் ஆப்பிள் வரத்து குறைந்து, கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.80, ரூ.90 க்கு விற்ற ஆப்பிள், நேற்று ரூ.150 க்கு விற்றது. இதே போல், நியூசிலாந்தில் அதிகளவில் சாகுபடி செய்யப்படும் காலா ஆப்பிள் வரத்தும் குறைந்து விட்டதால் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ ரூ.210 க்கு விற்பனையானது.
கடந்த வாரம் ஆரஞ்சு ஒரு கிலோ ரூ.90,ரூ.100 க்கு விற்பனையானது. வரத்து அதிகரிப்பால் ஒரு கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரைக்கும் விற்பனையானது.

வரத்து அதிகரிப்பால் மற்ற பழங்களின் விலையும் குறைந்தது. திராட்சை

கிலோ ரூ.60, மாதுளை ரூ.100, பப்பாளி ரூ.24, தர்பூசணி ரூ.18, கொய்யா ரூ.50 க்கு விற்றது.

**கொப்பரைக்கு செல்லும் நத்தம் தேங்காய்**

நத்தம், ,வட மாநிலங்களில் தேங்காய் தேவை குறைந்துள்ளதால் நத்தம் பகுதி தேங்காய் கொப்பரை தயாரிப்புக்கு அனுப்பப்படுகிறது. நத்தம், சாணார்பட்டி, மற்றும் சிறுகுடி கோட்டையூர் பகுதிகளில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் விளையும் தேங்காய்களை குஜராத், மகாராஷ்டிரா, வட கர்நாடகா, மத்தியபிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களுக்கு அனுப்பி வைப்பர். தற்போது ஆந்திராவில் தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. போக்குவரத்து செலவு குறைவு என்பதால் வட மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் ஆந்திராவில் அதிக அளவில் தேங்காய் கொள்முதல் செய்கின்றனர்.

இதனால் நத்தம் பகுதியில் உள்ள கோடவுன்களில் தேங்காய் அதிக அளவில் தேக்கமடைந்துள்ளன. எனவே, இப்பகுதி வியாபாரிகள் விவசாயிகளிடம் தேங்காய் வாங்குவதை குறைத்து விட்டனர். இதனால் விவசாயிகள் பலர் தாங்களே காய்களை உடைத்து கொப்பரையாக்கி வருகின்றனர்.

காங்கேயம் பகுதிகளில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலைகளுக்கு கொப்பரைக்காக வியாபாரிகள் தேக்கமடைந்துள்ள தேங்காய்களை அனுப்புகின்றனர்.

நத்தம் பகுதி வியாபாரி ஒருவர் கூறியதாவது: வட மாநிலங்களில் தேவை குறைந்துள்ளதால் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேறு வழியின்றி தேங்கியுள்ள காய்களை கொப்பரைக்கு அனுப்பி வருகிறோம். டன்னிற்கு ரூ.13,500தான் விலையாக கிடைக்கிறது, என்றார்.

## வரக்கு அதிகரிப்பால் நாவல் பழம் விலை குறைவுகிலோ ரூ.160க்கு விற்பனை

திண்டுக்கல்,,திண்டுக்கல்லில் நாவல்பழம் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, நத்தம், நிலக்கோட்டை, ரெட்டியார்சத்திரம், சாணார்பட்டி பகுதிகளில் 10 ஏக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. சர்க்கரை நோய், மூல நோய்க்கு மருந்தாகவும், பழம் மட்டுமின்றி, கொட்டையும் மருந்து தயாரிக்கவும் பயன்படுகிறது.

சீசன் காலத்தில் திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் 300 கிலோ வரை விற்பனைக்கு வரும். தற்போது வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது.

ஆந்திராவில் இருந்து தினமும் 400 கிலோ நாவல்பழம் விற்பனைக்கு வருகிறது. உள்ளூர் வரத்தும் அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ ரூ.240 க்கு விற்ற நாவல் பழம் நேற்று ரூ.80 குறைந்து, ரூ.160 க்கு விற்பனையானது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,'சில நாட்களாக ஆயக்குடி, நத்தம் பகுதியில் இருந்து நாவல்பழம் வரத்து வர துவங்கியுள்ளது. இதனால் விலை குறைந்துள்ளது. மேலும்குறையும்', என்றார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் உற்பத்தி பயிற்சி முகாம்

திண்டிவனம்: திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கான பயிற்சி நடந்தது.

பயிற்சியை, வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா துவக்கி வைத்தார்.

தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் கவிதா, காளான், பால் காளான் உற்பத்தி தொழில்நுட்பம் குறித்தும், காளானில் மதிப்பு கூட்டுதல் குறித் தும் செயல்விளக்கம் அளித்தார்.

முகாமில், கூட விவசாயிகள், மகளிர் மற்றும் கிராம இளைஞர்கள் கலந்து கொண்டனர்.
இந்த பயிற்சி முகாம் மாதந்தோறும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முகாமில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் கட்டணமாக ௩00 ரூபாய் செலுத்த வேண்டும்.

இதில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் 0௪௧௪௭-௨௫000௧ என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்து கொள்ளலாம் என திட்ட இயக்குநர் ஷீபா தெரிவித்துள்ளார்.

## இயற்கை விவசாயத்தில் முட்டைக்கோஸ், காலிபிளவர் : சாதனை படைக்கும் பெண்

காரைக்குடி, :குளிர்பிரதேசங்களில் மட்டுமே வளரும் முட்டைகோஸ், காலிபிளவர் வறண்ட பகுதியிலும், மொட்டை மாடியில் நிழல் வலை மூலம் வளர வைக்க முடியும் என்பதை நிரூபித்து வருகிறார், தேவகோட்டை மாரிச்சான்பட்டி சேர்ந்த அமுதாராணி.
எப்போதும் ஈரப்பதம் நிறைந்த குளிர் பிரதேசங்களில் வளரும் காய்கறிகளில் முக்கியமானது முட்டைகோஸ், காலி பிளவர். ஆர்வமும், உழைப்பும் இருந்தால் ஆப்பிள் கூட நம் ஊரில் விளையும் என்கிறார், மாடி தோட்டத்தில் சாதனை படைத்து வரும் தேவகோட்டை அமுதாராணி.
காரைக்குடி குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் நடந்த பயிர் காப்பீடு குறித்த கருத்தரங்கில் அவர் கூறியதாவது: தற்போதைய அவசர உலகில் உணவு பொருட்களின் தேவை அதிகரித்து விட்டது. இயற்கையாக விளைந்த காய்கறிகள், ரசாயன உரத்தால் நச்சாக மாறி வருகிறது. உணவுக்காக உழைக்கும் மனிதன் வரும் காலத்தில் உயிருக்காக போராடும் நிலை ஏற்படும். எனவே, நமக்கு தேவையான உணவு பொருட்களை நாமே தயார் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

500 சதுர அடி பரப்பில் மாடித்தோட்டம் அமைத்தேன். இதில் நிழல் வலையும் அமைத்துள்ளேன். காலி பிளவர், முட்டைகோஸ், கத்தரி, வெண்டை, மிளகாய், தக்காளி என வீட்டுக்கு தேவையான பல்வேறு வகை காய்கறிகளை பயிரிட்டுள்ளேன். 10 கிலோ கொள்ளளவு கொண்ட

தார்பாலின் பாக்கெட்டில், எட்டுகிலோ பேக்கிங்கில் மண், தேங்காய்நார், அசோஸ் பைரில்லம், மட்கிய குப்பை, கரம்பை மண் ஆகியவற்றை இட வேண்டும். குழித்தட்டு முறையில் விளைவித்த 20 நாளான நாற்றுகளை அதில் நட வேண்டும். 120 நாளில் முட்டைகோஸ், காலி பிளவர் பலன் தரும். இயற்கை பூச்சி விரட்டிகளான கற்றாழை சாறு, பூண்டு கரைசல் ஆகியவற்றை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மி.லி., எடுத்து தெளித்து வர நன்மை தரும் பூச்சிகள் பெருகும். வருமானம் என்பதை விட இயற்கை முறையில் விளைவித்த காய்கறிகளை உண்டு மகிழலாம். மாடி தோட்டம் கேட்போருக்கு அமைத்து தருகிறேன் என்றார். இவரை தொடர்பு கொள்ள: 97501 92645.--------

## 3 வேளாண் சேவை மையங்கள் அமைக்க விண்ணப்பம் வரவேற்பு

சிவகங்கை, :வேளாண் கருவிகளை வாடகைக்கு விடும் சேவை மையங்கள் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.கலெக்டர் மலர்விழி கூறியதாவது: விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள், இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கு விடும் சேவை மையங்கள் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் அமைக்கப்பட்டு வருகின்றன. வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணைத் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் தலா ஒரு சேவை அமைக்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் முதற் கட்டமாக சாக்கோட்டை, தேவகோட்டை, கண்ணங்குடி வட்டாரங்களில் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன. அதேபோல் இந்த ஆண்டு சிவகங்கை, காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம், கல்லல், சிங்கம்புணரி, திருப்புத்துார், எஸ்.புதுார் வட்டாரங்களில் அமைக்கப்பட உள்ளன. இந்த மையங்களை முன்னோடி விவசாயிகள், விவசாய குழுக்கள் அமைக்கலாம். ரூ.25 லட்சத்தில் வேளாண் கருவிகள் வாங்க ரூ.10 லட்சம் அரசு மானியம் வழங்கப்படும். மீதமுள்ள ரூ.15 லட்சம் முதலீடு செய்தால் போதும். விரும்புவோர் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர், கலெக்டர் அலுவலகம், தொலைபேசி எண் 04575 240213 ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## மாம்பழ சீசன் முடிவால் வரத்து குறைவு

கரூர்: கரூர் காமராஜர் மார்க்கெட்டுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் மாம்பழங்கள் தரவாரியாக பிரிக்கப்பட்டு, குடோனில் குவித்து வைத்துள்ளனர்.

இதுகுறித்து, மாம்பழ வியாபாரி ராஜேஸ்குமார் கூறியதாவது: கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், பெங்களூரு மற்றும் மலைப்பிரதேசங்களில் இருந்தும் பல்வேறு வகையான மாம்பழங்கள் லாரிகளில் ஏற்றி இங்கு கொண்டு வரப்படுகின்றன. இதில், கிளிமூக்கு, நீலம், பங்கனப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு வகையான மாம்பழங்கள் கொண்டு வரப்பட்டு தரம் வாரியாக குவிக்கப்படும். அதன்பின், மொத்த வியாபாரிகளுக்கு விற்கப்படும். கிலோ, 20 முதல், 50 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்ப வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். இந்தாண்டு சீசன் முடிந்து விட்டதால் வரத்து குறைவு தான். ஆனால், விலை அதிகரிக்க வில்லை. பழங்களை இயற்கையாக பழுக்க வைப்பதால், சுவை மிகுந்ததாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## ருசிக்க தூண்டும் மூணாறு ஆப்பிள்

மூணாறு:மூணாறு பகுதியில் நிலவும் காலநிலை ஆப்பிள் சாகுபடிக்கு உகந்தது அல்ல. ஆனால் அருகில் தமிழக எல்லையோரம் உள்ள காந்தலுார் ஊராட்சியில் ஆப்பிள் பழங்கள் நன்கு விளைகின்றன. இங்கு ஆப்பிள் மரங்கள் காய்க்க தொடங்கியுள்ளன. இவை ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பறிக்கப்படும்.

இந்நிலையில் மூணாறு பகுதியிலும் ஆப்பிள் காய்க்கும் என தெரியவந்துள்ளது. இதனை மூணாறு அருகே தேவிகுளத்தில் வசிக்கும் விவசாயி தாமஸ் உறுதி செய்துள்ளார். இவருக்கு கொச்சி-ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் 'கேப் ரோடு' அருகே ஏலத் தோட்டம் உள்ளது.இங்கு கொடைக்கானலில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆப்பிள் நாற்றுகளை 5 ஆண்டுகளுக்கு முன் நட்டார். இவை நன்கு வளர்ந்து தற்போது ஐந்து மரங்களில் ஆப்பிள் காய்த்துள்ளன. ' இயற்கை உரங்கள் மட்டும் பயன்படுத்துவதால், ஆப்பிள் பழங்கள் நன்கு இனிப்பு

தன்மையுடன் ருசியாக உள்ளது. மேலும் சில மரங்களில் பூக்கள்,பூத்துள்ளது,' என தாமஸ் தெரிவித்தார். காலநிலை மாற்றம்: பொதுவாக மூணாறு பகுதியில் நிலவும் காலநிலைக்கு ஆரஞ்ச்,கொய்யா உட்பட பல்வேறு பழ வகைகள் காய்க்கும். ஆப்பிள் பழங்கள் காய்ப்பதில்லை. ஆனால் இங்கு சமீப காலமாக காலநிலையில் மாற்றம் தென்படுகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் மூணாறு நகரில் உள்ள தனியார் தேயிலை கம்பெனியின் தலைமை அலுவலக வளாகத்தில் சில ஆண்டுகளுக்கு முன் ஆப்பிள் காய்த்தது.தற்போது கேப் ரோடு பகுதி யில் ஆப்பிள் கொத்துக் கொத்தாக காய்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாளில் 2.87 லட்சம் மரக்கன்றுகள் நட முடிவு: மாவட்டத்தில் பசுமையை மேம்படுத்த புது முயற்சி

தேனி: தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் 2.87 லட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது. தென் மேற்கு பருவமழையை பயன்படுத்தி மாவட்டத்தில் ஒரே நாளில் நட மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கண்மாய்,குளம், நீர் நிலைகள் சீரமைத்தனர். இதில் மரம் வளர்க்க அனுமதித்து சில ஊர்களில் வனத்துறையில் மரக்கன்றுகள் வளர்த்து ஊராட்சிகளுக்கு வழங்கினர். இந்த ஆண்டுமுதல் தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மாலதி முயற்சியில், அந்தந்த ஒன்றியங்களிலேயே மரக்கன்றுகள் வளர்த்து நடும் வகையில் புதிய முயற்சி மேற்கொண்டனர். நீண்டகால மரங்களாக புங்கன், புளி, வேம்பு, பூவரசு ஆகிய கன்றுகள் வளர்க்க முடிவு செய்தனர்.

இதற்காக மார்ச்சில் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக நர்சரி அமைக்கப்பட்டது. மரக்கன்றுகள் வளர்ப்பதற்கான நிழல் பந்தல், விதைகள், பாலிதீன் பைகள் போன்றவை சம்மந்தப்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் செலவில் ஏற்படுத்தப்பட்டன. இதன்படி ஒரு ஒன்றியத்திற்கு ஒரு லட்சம் மரக்கன்றுகள் வளர்க்க இலக்கு

நிர்ணயிக்கப்பட்டது. தற்போது முதற்கட்டமாக ஆண்டிபட்டி 62,000, க.மயிலாடும்பாறை 31,500, பெரியகுளம் 45,500, தேனி 35,008, போடி 60,375, சின்னமனுார் 30,150, உத்தமபாளையத்தில் 22,900 என மொத்தம் 2,87, 433 மரக்கன்றுகள் நன்கு வளர்க்கப்பட்டுள்ளன. அக்கன்றுகளை தென்மேற்கு பருவமழையை பயன்படுத்தி மாவட்ட நிர்வாகம் கிராமங்களில் உள்ள ரோடுகள், நடைபாதை ஓரங்கள், ஊராட்சி வளாகங்கள், பொது இடங்களில் நடுவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றது. மரக்கன்றுகள் நட்டு, தண்ணீர் ஊற்றி வளர்ப்பதற்கு தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட உள்ளது.

கலெக்டர் வெங்கடாசலம் கூறுகையில்,“ புதிய முயற்சியாக மாவட்டத்தில் 2.87 லட்சம் மரக்கன்றுகள் தென்மேற்கு பருவமழை பயன்படுத்தி நடவு செய்ய உள்ளோம்.

ஒரே நாளில் நட முயற்சி நடைபெறுகிறது. மரக்கன்றுகள் நடுவதால் சுற்றுச்சூழல் பாதுகாக்க உதவும். தொடர்ந்து பராமரிக்க தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் சம்பளம் வழங்கப்படும்,” என்றார்.

## ஏற்காடு கோடைவிழா இன்று துவக்கம்: 2 லட்சம் மலர்களில் குதிரை, கங்காரு உருவங்கள்

சேலம்: ஏற்காடு கோடைவிழா மற்றும் மலர் கண்காட்சி இன்று துவங்குகிறது. அதில், இரண்டு லட்சம் மலர்களை கொண்டு, குதிரை, பசுமை வீடு, அம்மா உணவகம், மாட்டுவண்டி, கங்காரு உள்ளிட்ட உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் ஏற்காட்டில், 41வது கோடைவிழா மற்றும் மலர் கண்காட்சி, இன்றும், நாளையும் நடத்தப்படுகிறது. அதில், அண்ணா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மலர் கண்காட்சி நுழைவாயிலில், அன்னாசி பழம், மாம்பழம், ஆரஞ்சு, எலுமிச்சை, பப்பாளி, பப்ளிமாஸ், வாழைப்பூ, பாக்கு பூ மற்றும் முள்ளங்கி, கோக்கோ உள்ளிட்ட காய்கறி பழங்களை கொண்டு அலங்கார நுழைவு வளைவு அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலா

பயணிகளை கவர, இரண்டு லட்சம் கொய்மலர்களை கொண்டு, குதிரை, பசுமை வீடு, அம்மா உணவகம், மாட்டு வண்டி, கங்காரு ஆகிய உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல், ரோஜா, ஜெர்பரா, ஆந்தூரியம், கார்னேசன், ஆர்கிட்ஸ், டெய்சி, லிமோனியம், அகபேந்தஸ், ரெட் ஹாட்போக்கர், கிரைசாந்தியம், அல்ஸ்டோமேரியா, கிலோயோலஸ், பேர்டு ஆப் பாரடைஸ், லில்லியம், ஹெலிகோனியம், டெல்பீனியம், ஹெலிகிரசைம், கோல்டன் ராட், ஆஸ்டர், நிலச்சம்பங்கி, லில்லியம்ஸ் போன்ற மலர்களை கொண்டு, 200க்கும் மேற்பட்ட வடிவங்களில் மலர் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. தவிர, 100க்கும் மேற்பட்ட மலர் வகைகள், 10 ஆயிரம் பூந்தொட்டிகளில், அண்ணா பூங்கா மற்றும் ரோஜா தோட்டத்திலேயே வளர்க்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறையினரால், பல்வகை காய்கறிகள் மற்றும் பழங்களை கொண்டு உருவாக்கப்பட்ட பறவை, மலர்கள், விலங்குகள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

கோடைவிழா மற்றும் மலர் கண்காட்சி துவக்க விழா, ஏற்காடு கலையரங்கத்தில், கலெக்டர் சம்பத் தலைமையில் இன்று காலை நடக்கிறது. அதில், வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் இடைப்பாடி பழனிச்சாமி, வேளாண் துறை அமைச்சர் துரைகண்ணு, சுற்றுலாத்துறை அமைச்சர் நடராஜன் மற்றும் துறை செயலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். கோடை விழாவையொட்டி, இன்று காலை, 7 மணிக்கு, ஏற்காடு அடிவாரம் காபி போர்டில், விளையாட்டுத்துறை மற்றும் வனத்துறையினர் சார்பில், மலையேறும் நிகழ்ச்சி, அரசு சாதனை விளக்க கண்காட்சி, வாணவேடிக்கை, சிறப்பு மருத்துவ முகாம், பல்வேறு விளையாட்டு போட்டிகள் மற்றும் படகுப்போட்டி உள்ளிட்டவையும் நடத்தப்படுகிறது.

மலைப்பாதையில் பைக் பழுது; 10 நடமாடும் சேவை மையம்: "மாவட்ட மோட்டார் பைக் மெக்கானிக்குகள் சங்கம் சார்பில், ஏற்காடு கோடைவிழா மலர் கண்காட்சியை காணவரும் சுற்றுலா பயணிகளின் பைக்குகளில் ஏற்படும் பழுதுகளை, இலவசமாக நீக்கித்தரும் வகையில், மலைப்பாதையில், பத்து இடங்களில் நடமாடும் பழுது நீக்கும் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்காடு ஊராட்சி மன்றம் அருகிலும், காலை, 8 முதல், மாலை, 7 மணி வரை இலவச பழுதுபார்க்கும் முகாம் நடக்கும்," என, சங்க தலைவர் குமரவேல் தெரிவித்தார்.

போக்குவரத்தில் மாற்றம்: கோடைவிழாவையொட்டி, ஏற்காடு செல்லும் பாதைகள் ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இதன்படி, சுற்றுலா பயணிகள், சேலம், கோரிமேடு, அடிவாரம் வழியாக ஏற்காடு செல்லவும், மலையை விட்டு கீழே இறங்கும் போது, குப்பனூர் சாலை வழியாக கீழே இறங்கவும் போலீசார் அறிவுறுத்தியுள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நபார்டு வங்கி பொதுமேலாளர் தகவல் : ஆளில்லா விமானம் மூலம் பயிர் சேதம் கணக்கிடப்படும்




காரைக்குடி: புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தின்படி, பயிர் சேதத்தின் அளவு குறித்து செயற்கைக்கோள், ஆளில்லா விமானம் மூலம் கணக்கிடப்படும் என நபார்டு வங்கி பொதுமேலாளர் தெரிவித்தார்.சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையம் (கேவிகே) சார்பில் மத்திய அரசின் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதில், நபார்டு வங்கி பொதுமேலாளர் பங்காருகிரி பேசியதாவது:விவசாயிகளுக்கான மத்திய அரசின் புதிய பயிர் காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வரும் ஜூனில் காரீப் பருவம் முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். 17 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் 19.44 கோடி ஹெக்டேர் சாகுபடி பரப்பில் 50 சதவீதம் பலன் பெறும்.

மத்திய, மாநில அரசுகள் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளன. பயிர் இழப்பு ஏற்பட்டால் விவசாயிகள் பெறக்கூடிய இழப்பீட்டுக்கு உச்ச வரம்பு கிடையாது. பயிர் சேதத்தின் அளவையும் தீவிரத்தையும் மதிப்பிட செயற்கைக்கோள், ஆளில்லா சிறுவிமானங்கள் போன்ற நவீனத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும். விவசாயிகள் தங்களின் செல்போனிலும் பயிர் சேதங்களை படம் எடுத்து அனுப்பலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரூ.1000க்கு ஏலம் போன வாழைத்தார்

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம் வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நேற்றைய ஏல விற்பனைக்கு 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள் 1800 வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ரம்ஜான் நோன்பு மாதம் என்பதால் வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் கோரினர்.

இதனால் கடந்த வாரங்களை காட்டிலும் இந்த வாரம் வாழைத்தார்கள் விற்பனை சூடுபிடித்தது. கதளி கிலோ ரூ.62 க்கும், நேந்திரன் கிலோ ரூ.45.60 க்கும், செவ்வாழை தார் ஒன்றுக்கு ரூ.715 க்கும், தேன்வாழை தார் ஒன்றுக்கு ரூ.765 க்கும், பூவன் தார் ஒன்றுக்கு ரூ.485 க்கும், ரொபஸ்டா தார் ஒன்றுக்கு ரூ.1000 க்கும், ஆந்திர ரஸ்தாளி தார் ஒன்றுக்கு ரூ.585 க்கும் ஏலம் போனது. மொத்தம் 1800 தார்கள் ரூ.4.17 லட்சத்திற்கு விற்பனையானது. இதில் பெரியூரை சேர்ந்த தேவமுத்து என்ற விவசாயி கொண்டுவந்த 20 சீப்புகளுடன் ரொபஸ்டா ரக வாழை தார் மட்டும் ரூ.1000 க்கு விற்பனையானது.

## வரத்து அதிகரிப்பால் சரிந்தது காய்கறிகள் விலை ஒரு கிலோ தக்காளி ரூ.28

மதுரை, : வரத்து அதிகரிப்பால், காய்கறிகள் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இரு வாரங்களுக்கு முன்பு ரூ.100க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி, தற்போது ரூ.28க்கு விற்பனையாகிறது. மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு திண்டுக்கல், தேனி, மதுரை உள்ளிட்ட

தென்மாவட்டங்களில் இருந்தும் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் காய்கறிகள் கொண்டு வரப்படுகிறது.

கோடை வெயில், மழையின்மை காரணமாக கடந்த சில வாரங்களாக காய்கறிகள் வரத்து வெகுவாக குறைந்திருந்தது. இதனால் காய்கறிகள் விலை உச்சத்தில் இருந்து வந்தது. குறிப்பாக தக்காளி ஒரு கிலோ ரூ.100க்கு விற்பனையாகி இல்லத்தரசிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்நிலையில் தற்போது தென்மேற்கு பருவமழை காரணமாக காய்கறிகள் வரத்து மெல்ல, மெல்ல அதிகரித்து விலை சரிவடைய தொடங்கியுள்ளது.

இதுகுறித்து சென்ட்ரல் காய்கறிகள் மார்க்கெட் சங்க தலைவர் முருகன் கூறும்போது:தேனி மாவட்டத்தில் இருந்து கொண்டு வரப்படும் தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. அதேநேரத்தில், பெங்களூரு தக்காளி வரத்தும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக உச்சத்தில் இருந்த தக்காளி விலை தற்போது ஒரு கிலோ ரூ.28க்கு விற்பனையாகிறது. இதேபோல், அனைத்து வகையான காய்கறிகளின் விலையும் படிப்படியாக குறைந்து வருகிறது. ஆனால் கிலோ ரூ.80க்கு விற்பனையான முருங்கைக்காய் மட்டும் ரூ.10 குறைந்து ரூ.70க்கு விற்பனையாகிறது.

மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறிகள் விலை நிலவரம்: (கிலோ மதிப்பு) தக்காளி ரூ.28, முருங்கைக்காய் ரூ.70, சின்ன வெங்காயம் ரூ.35, பல்லாரி ரூ.15, புடலங்காய் ரூ.12, பூசணிக்காய் ரூ.10,அவரைக்காய் ரூ.60, கத்தரி ரூ.15, சோயாபீன்ஸ் ரூ.85, பீட்ரூட் ரூ.20, சவ்சவ் ரூ.20, பச்சைமிளகாய் ரூ.18, டர்னிப் ரூ.135, வெண்டைக்காய் ரூ.20, உருளைக்கிழங்கு ரூ.20.

**கூடுதல் லாபம் கிடைக்க குதிரைவாலி சாகுபடி செய்யுங்க! வேளாண்துறை ஆலோசனை**

'பழநி, : கூடுதல் லாபம் கிடைக்க குதிரைவாலி பயிரிடலாமென வேளாண்துறை ஆலோசனை வழங்கி உள்ளது. பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் கடந்த வாரம் 2 நாட்கள் லேசான மழை பெய்தது. இதனால் மானாவாரி நிலங்களில் ஈரப்பதம் ஏற்பட்டுள்ளது. கிணற்றுப் பாசனம் உள்ளவர்கள் தங்களது நிலங்களில் குறுகிய காலப் பயிர்களை பயிரிட ஆரம்பித்துள்ளனர். குறுகிய காலப்பயிரில் கூடுதல் லாபம் கிடைக்க குதிரைவாலி பயிரிடலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குதிரைவாலி பயிரிட கோ 1, கோ (கேவி)2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். இறவையாக சித்திரை மற்றும் ஆடி பட்டங்களிலும், மானாவாரியாக ஆடி மற்றும் புரட்டாசி பட்டங்களிலும் குதிரைவாலியைப் பயிரிடலாம். கை விதைப்பு முறையாக இருந்தால் ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதையும், விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பாக இருந்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதையும் பயன்படுத்த வேண்டும். இடைவெளி 22.5 சென்டிமீட்டருக்கு 10 சென்டிமீட்டர் என்று இருக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி, பின் உழ வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் சாம்பல் சத்துகளை பரிந்துரைக்கப்பட்ட அளவில் இட வேண்டும். வரிசை விதைப்பு செய்திருந்தால் 3 முறை இடை உழவும், ஒரு முறை கை களையும் எடுக்க வேண்டும். சரியான பருவத்தில் விதைக்கும்போது எந்த வகை பூச்சி மற்றும் பூஞ்சாணமும் அதிகமாக இந்தப் பயிரை தாக்குவதில்லை. கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். தானியங்களைப் பிரித்த பின் உள்ள தட்டையையும் நன்கு உலர்த்திச் சேமித்து வைத்தால் ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்குத் தீவனமாகத் தரலாம். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டார

வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பட்டிவீரன்பட்டி பகுதியில் இருந்து மாம்பழக்கூழ் தயாரிக்க அனுப்பி வைக்கப்படும் கல்லாமை ரகம்



பட்டிவீரன்பட்டி

பட்டிவீரன்பட்டி பகுதியில் இருந்து கல்லாமை ரகத்தை சேர்ந்த மாம்பழங்களை வியாபாரிகள் கொள்முதல் செய்து பழக்கூழ் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

பூக்கள் உருவாகும்

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பட்டிவீரன்பட்டி, அய்யம்பாளையம், சித்தரேவு, சித்தையன்கோட்டை, மருதாநதி அணை பகுதி, கோம்பை

பகுதிகள், மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரப்பகுதிகளில் சுமார் 1,200 ஏக்கர் பரப்பளவில் மாமரங்கள் உள்ளன. இப்பகுதியில் காசா, கல்லாமை, செந்தூரம் காளைபாடி, கிரேப், மல்கோவா, இமாம்பசந்த் போன்ற வகைகளை சேர்ந்த மாம்பழங்கள் அதிகமாக விளைந்து வருகின்றன.

இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் இருந்து மாங்காய்களை கொள்முதல் செய்வதற்காக மொத்த வியாபாரிகள் ஆங்காங்கே தற்காலிக குடோன்களை அமைத்துள்ளனர். இவர்கள் மாங்காய்களை இங்கிருந்து வெளிமாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பி வருகின்றனர். இங்குள்ள மாமரங்களில் ஆண்டு தோறும் பிப்ரவரி மாத கடைசியில் பூக்கள் உருவாகும். பின்னர் பிஞ்சுகள் தோன்றும் நிலையில். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மாம்பழ சீசன் களைகட்டும்.

<u>கல்லாமை ரகங்கள்</u>

இதற்கிடையே இந்த ஆண்டு பருவம் தவறி பெய்த மழை, பருவ மாற்றம் மற்றும் நோய் தாக்குதல் காரணமாக அதிக எண்ணிக்கையில் பூக்கள் கருகியதால் மகசூல் வெகுவாக குறைந்துள்ளது. ஆனால் மாம்பிஞ்சுகள் உருவாகத்தொடங்கிய போது மழை பெய்ததால், பிஞ்சுகள் பெருக்க உதவியாக இருந்தது.

மேலும் இந்த ஆண்டு மாம்பழங்களின் விலையும் அதிகரித்துள்ளது. பெரும்பாலான விவசாயிகள் மாமரங்களை குத்தகைக்கு விடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதன்படி இந்த ஆண்டு குத்தகைக்கு எடுத்தவர்களுக்கு லாபம் அதிகமாக கிடைத்துள்ளது. தற்போது பெரும்பாலான மாங்காய் ரகங்களின் சீசன் முடிவுக்கு வந்து விட்டது. ஆனாலும் காசா மற்றும் கல்லாமை ரகங்கள் மட்டும் வரத்து உள்ளது.

இவற்றை வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர். இதில் கல்லாமை ரகம் மாம்பழ கூழ் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இப்பகுதியில் விளையும் மாங்காய்கள் புதுச்சேரி, கேரளா உள்பட பல்வேறு மநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதற்கிடையே இன்னும் சில வாரங்களில் மாம்பழங்களின் சீசன் முடிவுக்கு வர இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அலங்காநல்லூர் வடபகுதியான பாலமேடு பகுதியில் மாம்பழ சீசன் ஓய்ந்தது



அலங்காநல்லூர்,
அலங்காநல்லூர் வடபகுதியான பாலமேடு பகுதிகளில் மாம்பழ சீசன் ஓய்ந்தது. அமோகமாய் அறுவடையாகி விற்பனையான மாங்காய்களின் வரத்து குறைந்து விட்டன.

விளைச்சல் தொடங்கியது

மதுரையை அடுத்த அலங்காநல்லூர் வடபகுதியில் உள்ள பாலமேடு, முடுவார்பட்டி, வெள்ளையம்பட்டி, சரந்தாங்கி, சேந்தமங்கலம், கோடாங்கிபட்டி, பொந்துகம்பட்டி, வலையப்பட்டி, ஆதனூர் மற்றும் சாத்தியார் அணைப்பகுதி உள்ளிட்ட பல கிராமங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன.

இந்த தோப்புகளில் மாங்காய் சீசன் ஆரம்பிப்பதின் அறிகுறியாக மரங்களில் பூக்கள் பூத்து குலுங்கியது. தொடர்ந்து லேசானது முதல் மிதமான மழை பெய்ததால் விளைச்சல் தொடங்கி, மரங்களில் காய்கள் காய்க்கத் தொடங்கின. ஒவ்வொரு மரங்களிலும் கொத்து கொத்தாக

மாங்காய்கள் தொங்கின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து அறுவடை நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

மாம்பழ சீசன்

இதில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் மாங்காய் அறுவடை செய்யப்பட்டு மாம்பழ சீசன் தொடங்கியது. கல்லாமை, மல்கோவா, பாலாமணி, இமாம்பசந்து, சப்பட்டை, காளாபாடி உள்ளிட்ட பல ரகங்கள் அந்த சமயத்தில் பல்வேறு தோட்டங்களில் அறுவடை நடந்தது. பல்வேறு மாவட்டங்கள், உள்ளூர், வெளிமாநிலங்களில் இருந்து விவசாயிகள் படையெடுத்து வந்து, லாரிகளில் மாங்காய்களை வாங்கி சென்றனர்.

இந்த பகுதியில் பரபரப்பாக காணப்பட்ட மாம்பழ சீசன் கடந்த வாரத்துடன் ஓய்ந்தது. இருப்பினும் தற்போது கடைசியாக காசா லட்டு என்ற வகை மாங்காய் அறுவடையாகிறது. இது மொத்த விலைக்கு டன் ஒன்றுக்கு சுமார் ரூ.2 ஆயிரம் வரையிலும் விலைபோகிறது. ஒரு கிலோ மாம்பழம் ரூ.20 முதல் 25 வரையிலும் சில்லரையில் விற்பனையாகிறது. மாம்பழங்களில் காசாலட்டு தனிச்சுவையாக விளங்குகிறது, இந்த பழங்கள் சந்தைகளில் தற்போது அதிகமாக கிடைக்கிறது. அடுத்த மாதம் 15–ந்தேதிக்கு மேல் மாம்பழங்களின் வரத்து முழுமையாக நின்றுவிடும்.

**மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**



தஞ்சாவூர்,

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

<u>தூர்வாரும் பணி</u>

தஞ்சையில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகள் பேசியதாவது:–

அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க துணைத்தலைவர் ஜீவக்குமார்:– காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதை தமிழக அரசு தடுக்க வேண்டும். நீதிமன்றத்தின் உதவியை நாடுவதுடன் அனைத்துக்கட்சி, விவசாய சங்க பிரதிநிதிகள் கூட்டத்தை உடன் நடத்த வேண்டும். மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12–ந்தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. தண்ணீர் திறக்கப்படும் தேதியும் அறிவிக்கவில்லை. இந்த கால அவகாசத்தை பயன்படுத்தி தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமி.நடராஜன்:– காவிரி நடுவர்மன்ற இறுதி தீர்ப்பின்படி கர்நாடகத்திடம் இருந்து தமிழகத்துக்கு உரிய தண்ணீரை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். குறுவை சாகுபடியை இழந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். கூட்டுறவு கடன் தள்ளுபடியை வரவேற்கிறோம். அதேபோல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற பயிர்கடன்களையும் தமிழக அரசே செலுத்த வேண்டும்.

<u>தேங்காய்க்கு கூடுதல் விலை</u>

பட்டுக்கோட்டை வீரசேனன்:– தேங்காய் கொப்பரை கொள்முதல் விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாக வில்லை. இதனால் மாநில அரசு கிலோவுக்கு ரூ.40 ஊக்கத்தொகையாக வழங்க வேண்டும். நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்க வேண்டும். பாசன வாய்க்கால்களில் தூர்வாரும் பணி குறித்த விவரங்களை விளம்பரம் செய்ய வேண்டும்.

தென்னை மற்றும் கயறு வாரிய முன்னாள் உறுப்பினர் பழனிவேல்:– தமிழகத்தில் தேங்காய் கொப்பரை கொள்முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. தற்போது மழை பெய்வதால் கொப்பரை தயாரிப்பு குறைந்துள்ளது. இதனால் எதிர்பார்த்த விலை ஏற்றம் இல்லை. எனவே பொருளாதார நெருக்கடியில் அல்லல்படும் விவசாயிகளை காக்க, கேரளாவைப்போல் உரித்த தேங்காய்களை கிலோ ரூ.25–க்கு தமிழக அரசு வாங்க வேண்டும். மத்திய அரசின் நிர்ணய விலையை விட தமிழக அரசு கூடுதலாக விலை வழங்க வேண்டும். வெளி நாடுகளுக்கு தேங்காய்களை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>மாற்ற வேண்டும்</u>

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர் சங்க தலைவர் ராமநாதன்:– அரவை செய்த கரும்பு டன் ஒன்றுக்கு ரு.2 ஆயிரத்து 850 அறிவித்தும், ரூ.2 ஆயிரம் மட்டும் பாதிநபர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. மீதம் உள்ள தொகை வாகன வாடகை போக ரூ.750–ம் உடன் வழங்க வேண்டும். சர்க்கரை ஆலையில் பணம் மோசடி செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில் போடப்பட்டு உள்ளது. அதன் மீது

நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலையில் பழுதடைந்த எந்திரங்களை உடனடியாக மாற்ற வேண்டும்.

ஆம்பலாப்பட்டு பாசனதாரர் சங்க தலைவர் தங்கவேல்:– வேதபுரி வாய்க்காலில் மராமத்து பணிகள் செய்ய வேண்டும். கல்லணைக்கால்வாய் பாசன பகுதிகளில் உள்ள பாலம் பழுதடைந்து உள்ளது. அதனை அதிகாரிகள் சரி செய்ய வில்லை. மேலும் பாசன வாய்க்கால் கரைகளை உடைத்து நாசம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரைகள் உடைப்பு

அன்னப்பன்பேட்டை விவசாயிகள் அணி தலைவர் செல்வராஜ்:– ஜம்புகாவேரி வாய்க்காலில் செடி, கொடிகள் அடைத்து தண்ணீர் வருவது தடைபட்டுள்ளது. வெள்ளாம்பெரம்பூரில் செங்கல் காளவாய் அமைத்து வாய்க்கால் கரைகளை உடைத்துள்ளனர். இதனை சரி செய்ய வேண்டும்.

காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தலைவர் ரவிச்சந்தர்:– சிறு, குறு விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளின் பயிர்கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அடிக்கடி ஏற்படும் மின்தடை மற்றும் பழுதுகளை போர்க்கால அடிப்படையில் சரி செய்ய வேண்டும்.

உழவர் உரிமை இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் தங்கராசு:– நெல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும். விளைநிலங்கள் வீட்டுமனையாவதை தடுக்க வேண்டும். ஏரி, குளங்களை தூர்வார வேண்டும். இவ்வாறு அவர்கள் பேசினர்.

**ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய நாற்றுப் பண்ணை கள்**



**அமைப்பு**

தேனி,

தேனி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்டம் சார்பில் மரக்கன்றுகள் நடவு பணிக்காக நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

<u>மரக்கன்றுகள் உற்பத்தி</u>

தேனி மாவட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்டம் மூலமாக மரக்கன்றுகள் நடவு செய்து, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் நடவு செய்து, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக வனத்துறை நாற்றுப் பண்ணையில் இருந்து மரக்கன்றுகள் வாங்கி நடவு செய்யப்பட்டு வந்தன.

ஆனால், தேனி மாவட்டத்தில் கிராமப்புற பகுதிகளை பசுமையாக்கும் வகையில் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு மேலும் அதிக அளவில் மரக்கன்றுகள் தேவைப்பட்டன. இதனால் ஊரக வேலை உறுதியளிப்பு திட்டப் பணியாளர்கள் மூலமாகவே மரக்கன்றுகள் நட

திட்டமிடப்பட்டது. அதன்படி தேனி மாவட்டத்தில் 8 ஒன்றியங்களிலும் நாற்றுப் பண்ணைகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 1 லட்சம் மரக்கன்றுகள் வீதம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

நாற்றுப்பண்ணைகள்

இதில், கம்பம் ஒன்றியத்தை தவிர மற்ற 7 ஒன்றியங்களிலும் நாற்றுப் பண்ணை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த நாற்றுப் பண்ணைகளில் வேம்பு, புளி, அரசு உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகள் வளர்க்க விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. இந்த விதைகள் தற்போது முளைத்து கன்றுகளாக வளரத் தொடங்கி விட்டன. இந்த 7 ஒன்றியங்களிலும் தற்போது 2 லட்சத்து 87 ஆயிரத்து 433 மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஒன்றியம் வாரியாக ஆண்டிப்பட்டி ஒன்றியத்தில் 62 ஆயிரம், கடமலை–மயிலையில் 31 ஆயிரத்து 500, பெரியகுளத்தில் 45 ஆயிரத்து 500, தேனியில் 35 ஆயிரத்து 8, போடியில் 60 ஆயிரத்து 375, சின்னமனூரில் 30 ஆயிரத்து 150, உத்தமபாளையத்தில் 22 ஆயிரத்து 900 மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. விதைகள் விதைக்கப்பட்டு கன்றுகள் வளர்க்க நிழற்பந்தல் வசதி தேவை என்பதால், ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் நிதியில் இருந்து இந்த பந்தல் அமைக்கப்பட்டுள்ளன.

பசுமை கிராமங்கள்

இந்த நாற்றுகள் உற்பத்தி செய்யும் பணிகளில் ஈடுபடும் ஊரக வேலை உறுதியளிப்பு திட்டப் பணியாளர்களுக்கு வனத்துறை நாற்றுப் பண்ணை மூலமாக சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. பசுமை கிராமங்களை உருவாக்கும் வகையில் இந்த நாற்றுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள் அந்தந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி பகுதிகளில் ஊரக வேலை உறுதியளிப்பு திட்டப் பணியாளர்கள் மூலமாக நடவு செய்யப்பட்டு, முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகவலை தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மாலதி தெரிவித்தார்.